## அரசு — புலிகள் பேச்சுவார்த்தை; அமைச்சர்கள் மௌனம்!


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 19 இதழ் 237
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 05 — 10 — 1992


(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தை எதுவும் நடாத்துகின்றதா என்பது குறித்து பத்திரிகையாளர்கள் கிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளிடம் வினவிய போது அமைச்சர்கள் பதில்

[4ம் பக்கம் பார்க்க]

## பன்னிரு வேங்கைகளின் நினைவு தினம் இன்று

(உடுப்பிட்டி)

வல்வெட்டித்துறை தீருவில் மைதானத்தில் பன்னிரண்டு வேங்கைகளின் 5ஆம் ஆண்டு நினைவு விழா தீருவில் சதுரத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பமாகும்.

(4ம் பக்கம் பார்க்க)

## தென்பகுதி தடுப்புமுகாம்களில் உண்ணாவிரதப் போராட்டம்

[லண்டன்]

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மிகவும் பரிதாபகரமான நிலையில

[4-ம் பக்கம் பார்க்க

# கட்டைக்காட்டில் புலிகளிடம் 5 கோடி ரூபா ஆயுதம் இழப்பு!

# விசாரணைக்கு அரசு உத்தரவு!!

(கொழும்பு)

கட்டைக்காட்டில் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் ஐந்து கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களைப் பறிகொடுத்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. புலிகள் கைப்பற்றிய ஆயுதக்கிடங்கிலிருந்து இந்த ஆயுதங்கள் எடுத்துச்செல்லப்பட்டுள்ளன, இந்த ஆயுத இழப்பு குறித்து ஸ்ரீலங்கா அரசாங்கம் விசாரணை ஒன்றுக்கு உத்தரவிட்டுள்ளது. விசாரணையின்போது குற்றவாளிகளாகக் காணப்படுவோர் இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

## ஆயுதக்கிடங்கு பறிபோனதை அரசு ஒப்புக்கொண்டது

[கொழும்பு]

கட்டைக்காட்டில் வியாழன் அதிகாலை இடம்பெற்ற புலிகளின் பாரிய தாக்குதலில் ஆயுதக்கிடங்கு முற்றாக புலிகளினால் கைப்பற்றப்பட்டதையும் மினி முகாம் ஒன்று முற்றாக அழிக்கப்பட்டதையும் இலங்கை இராணுவம் நேற்று ஒப்புக்கொண்டது.

1990ம் ஆண்டு வடக்கு-கிழக்கில் யுத்தம் ஆரம்பித்தபின் இடம்பெற்ற புலிகளின் தனி ஒரு தாக்குதலில் அங்குதான் பெருமளவு ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டதாகவும் இராணுவத்தினர் ஒப்புக்

[4ம் பக்கம் பார்க்க]

## புலிகள் தாக்குதல் தொடரும்- அன்ரன் பாலசிங்கம்

[லண்டன்]

"இராணுவத்தின் மீது விடுதலைப் புலிகள் நடாத்திவரும் தாக்குதல்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும். நாம், கொரில்லாத் தாக்குதல்களை நடாத்துபவர்கள். இராணுவத்தினர் மீது எப்பொழுது, எங்கு தாக்க வேண்டுமோ அங்கு தாக்குவோம்."

4-ம் பக்கம் பார்க்க)

## பேராதனையில் மருத்துவக் கண்காட்சியை எதிர்த்து மாணவர் போராட்டம்

(கண்டி)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் மருத்துவக் கண்காட்சியை எதிர்த்து மாணவர்கள் மறியல் போராட்டத்திலும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்திலும் ஈடுபட்டனர்.

4-ம பக்கம் பார்க்க)

## நிவாரண வெட்டு: எதிர்க்கட்சிகள் இன்று கூடி ஆராய்வு

(கொழும்பு)

அகதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணம் முழு அளவில் வழங்கப்படவேண்டும் என்னும் கோரிக்கையை வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் இன்று முக்கிய கூட்டம் ஒன்றைக்

(4ம் பக்கம் பார்க்க)

## போரில் வெற்றிபெறுவதற்கு தமிழீழமக்கள் உதவவேண்டும் — தமிழேந்தி

[யாழ்ப்பாணம்]

எம்மைப் பொறுத்த வரை மிகக் குறைந்த வளங்களுடன் சிறிலங்கா அரசின் பொருண்மியத் (பொருளாதாரம்) தடைகளுக்கு இடையே 2000 கோடி ரூபாவைச் செலவு செய்யும் சிங்கள அரச படையுடன் போர் புரிகின்றோம். நடைபெற்றுக் கொண்டிருக்கும் விடுதலைப் போர், தமிழீழத்தின் விடுதலைக்காகத் தமிழீழ மக்களால் நடாத்தப்படும் போரேயாகும். போரில் வெற்றி பெறுவதற்குத் தமிழீழ மக்கள் தம்மாலான அனைத்தையும் செய்ய வேண்டும். இது அவர்களது

(4-ம் பக்கம் பார்க்க)

## மின்னல் தாக்கி மீனவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர்க் கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர் மீது மின்னல் தாக்கியதில் மீனவர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுக் காலை பெய்த கடும் மழையின்போது மின்னல் இந்த மீனவரைத் தாக்

(4ம் பக்கம் பார்க்க)

## சிசில், ஜெரி மன்னார் விரைவு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்துக்கு இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ணவும், வடபகுதித் தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வாவும் நேற்று விஜயம் செய்தனர்.

கடந்த வாரம் மன்னார் மாவட்டத்தில் நடந்த இராணுவ நடவடிக்கைகளின் போது ஏற்பட்ட விளைவுகளை அவர்கள் பார்வையிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(வி)

## 1993ல் பாதுகாப்புசெலவினம் குறைக்கப்படமாட்டாது!

### தளபதிகளுக்கு திறைசேரி உறுதி

[கொழும்பு]

1993ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு செலவீனத்தில் எதுவித குறைப்பும் செய்யப்படமாட்டாதென திறைசேரி பாதுகாப்பு அமைச்சுக்கு தெரிவித்துள்ளது.

1993ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்கு ஒதுக்கப்படும் நிதி

(4-ம் பக்கம் பார்க்க)


தாவரம் வளர்ந்தோங்க
தரணி சிறந்தோங்கும்

## வரி விளம்பரம்

### அராலியூராரின் நாடகங்கள்

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள்: 1. பொலிடோலே கதி, 2. பணமோ பணம் மேடை நாடகங்கள். 3. கெட்டிக்காரர்கள், 4. மதலாம்பிள்ளை 30/- வானொலி நாடகங்கள் 21 நாடகங்கள். (சி-6823)

### விற்பனைக்கு

Olivetti Typewriter நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. டிலைா வாச் வேக்ஸ் 281 ஸ்ரான்லி வீதி (வானவில் கூல்பார் அருகாமை), யாழ்ப்பாணம் (சி-6845)

அலுமாரி, புத்தக அலுமாரி சோக்கேஸ், மேசை, சாப்பாட்டு மேசை, தையல் மெஷின், கட்டில்கள், மெத்தைகள், கதிரை செற்றிகள், கந்தோர் மேசை கதிரை, குஷன் செற்றிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு 07, கைலாசபிள்ளையார் கோவிலின் வீதி, நல்லூர். (சி-685')

### தவறிவிட்டது

13-09-92 அன்று மகாதேவா குருக்களுக்குச்சொந்தமான திகதி முடிவடைந்த இங்கிலாந்து காசுக்கட்டளை ஒன்று உரிய கடிதத்துடன் தவறவிடப்பட்டுவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 83 ஏ, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி 6861)


## இன்று

(நல்லூர்)

மாணவர்கள் நலன் கருதி இன்று 5-ந் திகதி பாயோவான் கல்லூரி மண்டபத்தில் இரவு 6 மணி முதல் 9 மணி வரை மின் ஒளி வழங்கும் திட்டமொன்றை டரியோவான் ஆலயம் மேற்கொண்டுள்ளது. (158)

(யாழ்ப்பாணம்)

சிவ சின்னத்தம்பி சுவாமிகளின் 52 வது வருடாந்த சமாதி குருபூசை இன்று திங்கட்கிழமை நடைபெறும். அன்று சுத்தசிவ சமரச சன்மார்க்க சாதுசங்க சமாதி குருபீடம், மறவன்புலோ கைதடியில் சமாதியில் விசேட அபிஷேகமும் அன்பர் அன்னதானமும் வழங்கப்படும்.

(யாழ்ப்பாணம்)

வண்ணை சிவன்கோவில் சைவ சமய வகுப்பு இன்று திங்கட்கிழமை (விஜயதசமி) பிற்பகல் 2 மணி 45 நிமிடமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வாழ்க்கையோடு இணைந்த சைவநெறி, நீதிநூல்கள், ஆறுமுக நாவலர் சைவவினாவிடை திருமுறை ஓதும்முறை, ஆகியன கற்பிக்கப்படும். ஞாயிறு தோறும் காலை 9 மணிமுதல் இவ்வகுப்பு நடைபெறும்.

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி மனோன்மணி அந்தாதி - திருவூஞ்சல் நூல் வெளியீட்டுவிழா இன்று உடுப்பிட்டி வடக்கு கொம்மன்துறை மனோன்மணி அம்பாள் தேவஸ்தானத்தில் தர்மகர்த்தா சபைத் தலைவர் திரு. ச. பரராசசிங்கம் தலைமையில் முற்பகல் 10.30மணிக்கு நடைபெறும்.

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துமகளிர் கல்லூரியில் விஜயதசமி விழா இன்று நடைபெறுகிறது.

0 0 0

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாலயத்தில் கடந்த 27 ஞாயிறு முதல் வித்தியாலய அதிபர் திரு. வ. யோகானந்தசிவம் தலைமையில் நவராத்திரி சிறப்பாக நடைபெற்று வருகிறது. (139)

0 0 0

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை பிளவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் அதிபர் திரு. சி. சச்சிதானந்தம்பிள்ளை தலைமையில் நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. (139)

0 0 0

(நெல்லியடி)

புலோலி கிழக்கு சுந்தா தோட்டம், ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில இன்று வரும் திங்களன்று இரவு, நவராத்திரி விழாவின் இறுதி நாள் வைபவம் கலைநிகழ்ச்சிகளுடன் இடம்பெறவுள்ளது. (160)

0 0 0

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஊர்காவற்றுறைப் பிரிவின் நவராத்திரி விழா சுண்டுக்குளியிலுள்ள செஞ்சிலுவைச் சங்கத்தில் இன்று 5-ந் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

0 0 0

(நெல்லியடி)

நவராத்திரி தினத்தை முன்னிட்டு கிழக்கு சந்தா தோட்டம், ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் இன்று திங்கள் இரவு பல சிறப்பு கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

0 0 0

(நெல்லியடி)

கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியில் அதிபர் திரு. இ. விஜயரத்தினம் தலைமையில் நவராத்திரிவிழா இன்று 5-ந் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (160)

0 0 0

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நவராத்திரிவிழா நடைபெற்று வருகின்றது. [72]

0 0 0

(சுதுமலை)

சுதுமலை கிழக்கு ஸ்ரீ ஞான வைரவர் கோவிலில் விஜய தசமியை முன்னிட்டு இன்று 5-ந் திகதி திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு கம்பன் கழகத்தைச் சேர்ந்த திரு. த. சிவகுமாரன் "பண்சுமந்த பொற்பணி செய்வார்" என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார். [109]

0 0 0

(கொழும்புத்துறை)

அரியாலை பிரப்பங்குளம் அருள்மிகு ஸ்ரீ மகாகுமாரி அம்மன் ஆலயத்தில் நவராத்திரி விழா தீபாரதனை, வழிபாடுகளுடன் நடைபெறுகிறது. (1?4)

## இராசி பலன்

05-10-1992

திங்கட்கிழமை

(தமிழுக்கு புரட்டாதி 19)

நவமி பி. ப. 1-16 வரை உத்தராடம் மு. இ. 8-16 வரை இராகுகாலம் காலை 7-32 முதல் 9-02 வரை: சுப நேரம் பகல் 12-02 முதல் 1.32 வரை கேதார கௌரி விரதம்.

மேடம்: முயற்சி பலிதம், உறவினர் நன்மை, பாராட்டு.

இடபம்: காரிய தடை, மனச்சஞ்சலம், வெறுப்பு.

மிதுனம்: அச்சல் மிகுதி, வயிற்றுவலி, வீண் ...

கடகம்: செய் ... ழி கீர்த்தி, மதிப்பு, கு...

சிங்கம்: வித்தை வருமதி, பிறருக்கு உதவுதல். பண வரவு.

கன்னி: வீண்பழி. இடையூறு, அலைந்துதிரிதல்.

துலாம்: மதிப்பு குன்றுதல், பணநஷ்டம், வேதனை.

விருச்சிகம்: காரியச்சிறப்பு, இனசனவருகை. பயணம்.

தனுசு: விரோதிமூலம் பயம், கெட்டகனவு, யோசனை.

மகரம்: செல்வாக்கு, விவேகமான முடிவு, மகிழ்ச்சி.

கும்பம்: பலவிதசெலவு, அவமானம், குடும்பப் பிரிவு.

மீனம்: புத்திரர் பெருமை, பதவி மாற்றம், தியாகம்.

## பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றனர்

(உடுப்பிட்டி)

மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை ஐக்கிய நாணய சேமிப்புச் சங்கம் நடாத்திய பாலர் பாடசாலை சிறுவர்களுக்கான நவராத்திரி விழாவை யொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட பேச்சுப் போட்டியில் முதலாவது இடத்தைதி. பிரதீபாமாரும் இரண்டாவது இடத்தை யோ. யசோதாவும் முறையே பெற்றுக் கொண்டனர். (150)

# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



## லெப். கேர்ணல் குமரப்பா

[பாலசுந்தரம் இரத்தினபாலன்]

(முன்னாள் யாழ். மட்டக்களப்பு பொறுப்பாளர்)

பிறப்பு: 27-05-1957 :: வீரமரணம்: 05-10-1987

திதி: 10-10-1992 சனிக்கிழமை

இங்ஙனம்:

பெற்றோர், சகோதர, சகோதரிகள், மனைவி, நண்பர்கள், உறவினர்,

"செல்வமாளிகை",

நடராசா வீதி, வல்வெட்டித்துறை. (சி 6850)


## சித்ராலயா

# இடமாற்றம்

இதுவரை காலமும் கோவில்வீதி, நல்லூரில் இயங்கிவந்த எமது நிறுவனம் 05-10-92 திங்கள் முதல் ஸ்ரான்லி வீதியிலுள்ள பழைய இடத்தில் இயங்கும் என்பதை அறியத்தருகின்றோம் (சி 6856)

# கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீவல்லிபுரநாதர் தேவஸ்தான

# இரதோற்சவ சிறப்பிதழ்

வைஷ்ணவ சம்பிரதாயத்தைக் கட்டிக்காப்பதற்கும் அதன் சித்தாந்தத்தை மேலோங்கச் செய்வதற்கும் இலங்கையில் இருக்கின்ற விஷ்ணு ஆலயங்களில் கோண்டாவில் கிழக்கில் அருட்குடி கொண்டிக்கும் அருள்மிகு ஸ்ரீவல்லிபுரநாதர் தேவஸ்தானமும் ஒன்றாகும்.

காலம் செல்லச் செல்ல மக்கள் வல்லீயப்பர் என்ற திருநாமமிட்டு வழிபட்டனர். அந்த ஆயிரநாமனை எப்பெயர் இட்டு அழைத்தாலும் அப்படியே வருபவனுதலால் மக்கள் மெய்யன்புடன் வழிபட்டு வந்தனர். ஆலயத்தை உருவாக்குவதற்கு மூலகர்த்தாவாக இருந்த அவ்வன்பரின் யால் அவர் தொடர்ந்து ஆலயத்திற்கு இன்றும் பால் வழங்கிவரும்விடயம் எல்லோரும் அறிந்ததே.

மூர்த்திதலம் தீர்த்தம்முறையாகஅமையப்பெற்றஇவ்வாலயத்தில் கருவறை, விமானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், வசந்த மண்டபம், தரிசன மண்டபம் அநந்தசயன சம்பிரதாயத்தை வளர்க்கும் ஒரு ஆலயமாகவும் இது திகழ்கிறது. இங்கு மக்கள் வருகை தந்து தீராத நோய்கள் எல்லாம் தீர்த்த வண்ணம் செல்கின்றனர்.


மேலும் கடந்த சிலவருடங்களாகத் தடைப்பட்டிருந்த இவ்வாலயத் திருப்பணி வேலைகள் தற்பொழுது சிறிதுசிறிதாக இடம்பெற்று சுற்றுக் கொட்டகை அமைக்கும் வேலையும் ஒருபகுதி நிறைவுற்றுள்ளது.

இவ்வரும் பணிக்கு அன்பர்கள் பலர் பண உதவி புரிந்தனர். தொடர்ந்து ஆலயத் திருப்பணி வேலைகளுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன.

மேலும் கடந்த 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பித்த மகோற்சவம் 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆழ்வார் பன்னிருவர் உற்சவத்துடனும், 3ம் திகதி வேட்டைத் திருவிழாவுடனும் 04ஆம் திகதி பகல் அநந்த சயனத் திருக்கோலத்துடனும், மாலை சப்பரத் திருவிழாவும் இடம்பெற்று இன்று காலை 10 மணிக்கு அருச்சுனனுக்குத் தேர்ப்பாகனாக வந்த அந்தப் பார்த்த சாரதி தானே தேரிற் பவனி வருகின்ற காட்சியை

'ஆரா அமுதே அடியேன் உடலம் நின்பால் அன்பாயே'' என்று பக்தர் கூட்டம் அவனைப் பரவித் தொழுவதற்காக ''மத்தகத்திடை கைகளைக் கூப்பிப் பேசுகின்ற காட்சி நம்பன் போலே வீழ்த்து அமுக்கும் நாட்டிலுள்ள பாவமெல்லாம் தீருகின்ற அருங் காட்சியாகத் தெரிகின்றது.

## கீதை சொன்ன கண்ணன் இன்று தேரில் பவனி வருகிறன்



★ ★ ★

05 . 10 . 92

★ ★ ★

இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன்னரே மூன்று குடிகளை மட்டும் கொண்டிருந்த இவ்விடத்து அன்பர் ஒருவர் அச்செழுவு என்னும் இடத்திற்குச் சென்ற பொழுது அங்கிருந்த ஒரு அகழிக்கருகில் அசரீரி கேட்டபொழுது கண்டெடுத்த கற்சிலை ஒன்றைத்தன்னுடனேயே கொண்டுவந்து இங்கிருக்கிற ஒரு அரச மரத்தின் கீழ்வைத்து வழிபட்டதாயும்காலாகாலத்தில்மக்கள்வழிபாட்டிற்கு வரத்தொடங்கியதாயும் பின் ஓலையால் வேயப்பட்ட ஆலயமாகவும் தொடர்ந்து கல்லால் கட்டி ஓட்டினால் வேயப்பட்ட ஒரு மடாலயமாக இருந்ததாகவும். ஆலயத்திற்குத் தெற்குப் புறமாக ஒரு வேப்பமரம் நின்றதாகவும் அதன் அடியில் பாம்புகள் குடிகொண்டதாகவும் மக்கள் அவைக்குப் பாலமுதம்வழங்கி நாக வணக்கம் செலுத்தியதாயும் உள்ள செய்திகளை காலவழிச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

வழித்தோன்றலின் ஆலயமாக இருந்த இவ்வாலயம் 1979ல் இருந்து பொதுவுடமையாக்கப்பட்டு அறங்காவற்குழு அமைக்கப்பட்டு பாலஸ்தாபனமும் செய்யப்பட்டது.

இவ்வூர்மக்களின்தாழாதஉறுதியும் தளராத முயற்சியும் மேலானபக்தியும் காலஞ்சென்ற அமரர் உயர்திரு. சீதாராம சாஸ்திரிகள் அவர்களின் ஆசியும் இறைவனின் பெருங் கருணையும் ஸ்ரீ வல்லிபுரநாதர் எனப்பெயரிடப்பட்டு 1981ல் மகாகும்பாபிஷேகம் செய்ய அருள் கூட்டியது.

6-வது மண்டலாபிஷேக தினத்தன்று நாதஸ்வர இசைக்கு நாகமொன்று படமெடுத்து ஆடியதும் பின் அது கருவறைக்குள் மறைந்த சம்பவமும் மக்களால் இன்றும் நினைவுபடுத்துகிற விடயமாக உள்ளது. மேலும் இக் கும்பாபிஷேகத்திற்கும் பால் தர மறுத்த குடியானவரின் ஒருவரின் பசு தன் எஜமானுக்கே பால்தர மறுத்தமை ரங்கநாதர் ஆலயம், மகாலட்சுமி ஆலயம், ஆஞ்சநேயர் ஆலயம், நவக்கிரக மண்டபம் ஆகியவை அமையப் பெற்று ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக நின்ற கோலவரதராஜ மூர்த்த வடிவில் அருளுகின்ற இவ்வாலயத்தில் 1983 ஆம் ஆண்டு கலியுகவரதன் வேங்கடாசலபதி அவதார நாளான புரட்டாதித் திருவோணத்தை பட்சமாக வைத்து மகோற்சவம் இடம்பெற்றது. மேலும் அவ்வருடமேயே சித்திரத்தேர் பவனி வந்தமை இவ்வூர் மக்களின் விடாமுயற்சியும் இறைவனின் பேரருளும் என்றுமே கூறவேண்டும்.

இங்கு புதுவருடப்பிறப்பு தசாவதார தினங்கள் குறிப்பாககிருஷ்ணஜெயந்தியும் உறியடி உற்சவமும், ஆழ்வார் உற்சவங்கள், 10 நாட்கள் கொண்ட மகோற்சவம், ஏகாதசி உற்சவங்கள், திருப்பாவை 30 நாட்கள் போன்றவை வருடாவருடம் கொண்டாடப்படுவதாயும் வைஷ்ணவ

★ இரதோற்சவ விழா சிறக்க வாழ்த்துவோர் ★


**றட்ணம்ஸ் சவுண்ஸ்**
கோண்டாவில் கிழக்கு

**யூனிபெக்ஸ் வீடியோ**
கோண்டாவில் வடக்கு
கிளை: குளப்பிட்டிச் சந்தி
கொக்குவில்
(மிக்ஸிங் ஸ்ருடியோ)

**க. செல்லப்பா**
குடும்பத்தினர்
கோண்டாவில் வடக்கு

**லிங்கம் கூல்பார்**
யாழ்ப்பாணம்

**விக்னு பார்மஸி**
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

**L. G. லிங்கநாதன் அன் கோ**
பெரிய கடை
யாழ்ப்பாணம்


"அண்டர்கோன் அணி அரங்கன் என் அமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே''
என்று பக்தர்கள் பரவசமடைகிறார்கள்.

தொடர்ந்து நாளை 6-ம் திகதி காலை 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும், 7-ம் திகதி திருக்கல்யாண வைபவமும், 8-ம் திகதி ஆஞ்சநேயர் பொங்கலுடனும் மகோற்சவம் இனிது நிறைவுறுகிறது.

"கண்ணன் கழலினை நண்ணும் மனமுடையீர்
எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே''

தொகுப்பு:

**எஸ். கே. என். தவராஜா**

(யாழ். பல்கலைக்கழகம்)

மகாபாரத விரிவுரை சிவநெறித் தொண்டன்

**செ. சத்தியமூர்த்தி**

ஆசிரியர்


**நிரு கல்வி நிலையம்**
புகையிரத நிலைய வீதி
கோண்டாவில் மேற்கு


சிறப்புமலர்
ஏற்பாட்டாளர்:
செ. சண்முகலிங்கம்


**இராசமணி களஞ்சியம்**
பலசரக்கு வியாபாரம்
ஆலடி வீதி,
கோண்டாவில் கிழக்கு

## 5 வது உலகத் தமிழ் பண்பாட்டு மாநாடு: ஆய்வரங்கு நிகழ்ச்சிகள்

# இன்று சிட்னியில் நடைபெறும்

(சிட்னி)

5-வது உலகத் தமிழ்ப்பண்பாட்டு மாநாடு ஆய்வரங்க நிகழ்ச்சிகள் இன்று 5ம் தேதி காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை அவுஸ்திரேலியாவிலுள்ள சிட்னி பல்கலைக்கழக இறசல் மண்டபத்தில் நடைபெறும்

சிறப்புப் பேச்சாளர்களாக தஞ்சாவூர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. பாலசுப்பிரமணியம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ். பத்மநாதன். மெல்போர்ன் இளைப்பாறிய பேராசிரியர் சி. ஜே. எலியேசர், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக பேராசிரியர் எஸ் முத்துக்குமரன், பாண்டிச்சேரி பல்கலைக்கழக பேராசிரியர் க. ப. அறவாணன். ஆர்மிடேல் பல்கலைக்கழக அறிஞர் கலாநிதி கெலன் பிரேசர், பிரான்ஸ் அறிஞர் கவிஞர் சக்திப்புயல். தென்னாபிரிக்க அறிஞர் வித்துவான் செல்லப்பா, மைசூர் கலாநிதி வீரப்பன், மலேசியப் பேராசிரியர் வீரப்பன், கனேடிய பதிப்பாளர் நிழற்சந்திரா, கல்கண்டு ஆசிரியர் யாழ்லேனு தமிழ் வாணன். 'இதயம் பேசுகிறது' ஆசிரியர் மணியன் ஆகியோர் பங்குபற்றுவார்கள்.

உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கமானது 1974-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4-வது அனைத்துலகதமிழ்ஆராய்ச்சி மாநாட்டுடன் உருவாக்கப்பட்டு இன்று மலேசிய நாட்டில தலைமையகத்தைக் கொண்டுள்ளது.

இவ்வியக்கம் உலகத் தமிழ் பண்பாட்டு மகாநாடுகளை நான்குமுறை முன்னின்று நடாத்தியுள்ளது. 1977 – 87 ம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் இம் மாநாடுகள் சென்னை' மொறிஷியஸ், சேலம், கோலாம்பூர் ஆகிய இடங்களில் நடைபெற்றன 5-வது மாநாடு அவுஸ்திரேலியாவின் சிட்னி மாநகரில் நடைபெறுகிறது. (154-75)

## வாணி விழா

(யாழ்ப்பாணம்)

மீசாலை தெற்கு கந்தசாமி கோவில் வீதியிலுள்ள 'மிதிலை கலாமன்றம்' அதன் வாணி விழாவை நேற்று ஞாயிற்றுக் கிழமை சிறப்பாகக் கொண்டாடியது.

விழாவில் வாணியின் பெருமை போற்றும் சிறுவர் பேச்சுக்களும். சிறுமிகளின் கும்மிப்பாட்டுக்களும் இடம் பெற்றன.

நிகழ்ச்சிகளை மன்றத் தலைவி திருமதி மிதிலைச்செல்வி முரளீதரன் ஒழுங்குசெய்து நடத்தினர். (இ)

### பன்னிரு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தீவகம், வலிகாமம், தென்மராட்சிப் பகுதி மக்கள் உடுப்பிட்டிச் சந்தியில் இருந்தும் கடற்புலிகள் உட்பட வடமராட்சிப் பகுதி மக்கள் நெடியகாட்டிலிருந்தும் இன்று பிற்பகல் 3-30 மணிக்கு லெப். கேணல் குமரப்பா லெப். கேணல் புலேந்திரன். மேஜர் அப்துல்லா, கப்டன் கரன். கப்டன் ரகுவப்பா, கப்டன் பழனி. லெப். அன்பழகன். லெப். தவக்குமார், இரண்டாம் லெப் நந்தகுமார். இரண்டாம் லெப். றெஜினோல்ட் கப்டன் மிரேஸ், கப்டன் நளன் ஆகிய பன்னிரண்டு வேங்கைகளின் உருவப்படங்களைத் தாங்கிய வண்ணம் ஊர்வலமாகப் புறப்பட்டு 5 மணிக்கு தீருவிலை அடைந்ததும் கூட்டம் ஆரம்பமாகும். (150)

### அரசு புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அளிக்காது மௌனம் சாதித்தனர்.

கொள்ளுப்பிட்டி கிராமதோய நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற பத்திரிகையாளர்களுடனான சந்திப்பின்போதே அமைச்சர்கள் இந்தவிடயம் குறித்து மௌனம் சாதித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சந்திப்பின்போது கலாசார தகவல் சுதேசவைத்திய அமைச்சர் டபிள்யு ஜே. எம். லொக்கு பண்டா, பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தகவல் துறை இராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்க உட்பட கூட்டுப்படை உயர் அதிகாரிகளும் சமுகமளித்திருந்தனர்.

பத்திரிகையாளர்களின் வினாக்களுக்கு பதில் அளிக்க தயங்கிய அமைச்சர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவாறு இருந்ததாக கூறப்படுகிறது. (க)

### போரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரலாற்றுக் கடமையாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித்துறையின் பொறுப்பாளர் செ. தமிழேந்தி விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இதுவரை மீட்பு நிதிக்கடன் திட்டத்திற் பங்கேற்காத வசதி உள்ளவர்கள் 10,000 ரூபாவை மட்டும் கடனாகத் தந்துதவி தமிழீழ விடுதலைப் போரில் தங்கள் பங்களிப்பைச் செய்வதற்கு ஒரு வாய்ப்பைத் தர முடிவு செய்து உள்ளோம் இந்த வாய்ப்பினை பயன்படுத்துமாறு வசதியுள்ள அனைவரையும் வேண்டி நிற்கிறோம்.

1977ம் ஆண்டு சிறிலங்கா அரசின் உண்மையான பாதுகாப்புச் செலவினம் 43 கோடி 85 நூறுயிரம் (லட்சம்) ரூபாவாகும். 1991ல் இத்தொகை 1006 கோடி 37 நூறுயிரம் ரூபா. 1992ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டப் பாதுகாப்புச் செலவின ஒதுக்கீடு 1542 கோடி 40 நூறுயிரம் ரூபா. இத்தொகை துணை ஒதுக்கீட்டினூடாக 2000 கோடி ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆண்டு முடிவில் உண்மையான செலவினம் 2000 கோடி ரூபாவை விஞ்சிவிடலாம்.

தமிழீழ மீட்பு நிதிக்கான கடனை நாம் திரட்டத் தொடங்கிய போது இக்கடனைத் திருப்பித் தருவார்களா என்று ஐயப்பட்டவர்களும் உண்டு ஆனால் நாம் திருப்பிச் செலுத்தி வருகிறோம். தமிழீழ மீட்பு நிதிக்கு உதவக்கூடாது என்ற நோக்கம் கொண்டிருந்த வசதிபடைத்தோரிடம் நாம் இரண்டு பவுணுக்கு மேலாக வரிபுறுத்தி வாங்கியது உண்மையே.

நாம் கடனை மீளளிக்கத் தொடங்கியவுடன் இது ஒரு ஏமாற்று வேலை என்றார்கள் சிலர். ஆயினும் தொடர்ந்தும் நாம் மீளளித்து வருகிறோம். பொறுக்க முடியவில்லை. மீண்டும் கூடுதலாகப் பெறுவதற்காகவே இரண்டு பவுணை நாம் மீளளிப்பதாக கதைகளைக் கட்டி விட்டார்கள். இதனால் கடனை மீளளிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிற் சிலர் மீளப் பெறுவதற்குத் தயங்கினார்கள். ஆனால் மீண்டும் மீண்டும் அவர்களுக்கு உண்மை நிலையைத் தெளிவு படுத்தி திருப்பிக் கொடுத்துள்ளோம.

எமது வெற்றிகளுக்கு அடித்தளமாக அமைந்தவை, எமது தலைவரின் ஆளுமையும், தூரநோக்கும், விடுதலைப் புலிகளின் வீரமும், ஈகமும் மட்டுமன்றி எது நடந்தாலும் இறுதிவரை எம் மண்ணிலேயே வாழ்வோம் என்ற எண்ணத்துடன் வாழ்ந்து வரும் தமிழீழ மக்களின் மன உறுதியும், பங்களிப்புமேயாகும்.

### ஆயுதக்கிடங்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டனர்.

இத் தாக்குதலில் 3பேரும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டும் 20 படையினர் வரை படுகாயமடைந்ததும் தெரிந்ததே (சி)

### நிவாரண

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி ஜனநாயக தேசிய முன்னணி, ஆகிய கட்சிகள் உட்பட பல கட்சி உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளையில் அரசால் அரைவாசியாக குறைக்கப்பட்ட நிவாரணம் எதிர்வரும் ஜனவரி மாதமளவிலேயே முழுமையாக வழங்கப்படலாம் என அரசு தரப்பில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அகதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத்தை அரைவாசியாகக் குறைத்தமையால் அகதிகள் பெரும்பட்டினிச் சாவை எதிர்நோக்கவேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (க)

### கட்டைக்காட்டில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

1990ம் ஆண்டிலிருந்து விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்துக்குமிடையில் நடைபெற்றுவரும் மோதல்களில் கட்டைக்காடுமோதலில்தான் இராணுவம் பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகளிடம் பறி கொடுத்துள்ளது.

திடீரென பெருமளவு விடுதலைப்புலிகள் காவலரண்களையும், மினி முகாமையும் தாக்கி ஆயுதங்களைக் கைப்பற்ற மேற்கொண்ட முயற்சிகளை இராணுவம் 'தடுக்கப் போரிட்ட போதிலும் அது பலனளிக்கவில்லை.

புலிகள் விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள், அதிக சகதி வாய்ந்த தொலைத் தொடர்பு சாதனங்கள், பெறுமதியான வகனங்கள் ஆகியனவற்றை கைப்பற்றிச் சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தாக்குதல் குறித்து விசாரணை செய்வதற்காக தற்போது விசேட ராணுவக் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது என்று இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (வி)

## 10 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பில்லை

(கொழும்பு)

இலங்கையில் 10 லட்சம் பேர் வேலைவாய்ப்பு இல்லாது இருக்கின்றனர்.

அண்மையில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேராசிரியர் விலி மெண்டிஸ் இத்தகவலைத் தெரிவித்தார்.

இப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்காகப் புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் நோக்கத்துடன் பல வழிமுறைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது இது ஒரு தேசியப் பிரச்னையாகும்

க. பொ. த. சாதாரண தரம், உயர் தரத்தில் படித்தவர்களின் வேலையில்லாப் பிரச்னை முக்கிய பிரச்னையாக இருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார். (சு)

### 1993-ல் பாதுகாப்பு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

குறித்து கடந்த வாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் சிறில் ரணதுங்காவும் முப்படைத்தளபதிகளும் திறைசேரியின் செயலர் திரு. ஆர். பாஸ்கரலிங்கத்துடன் பேச்சுக்கள் நடாத்தியுள்ளனர்.

இதன்போது பாதுகாப்பு செலவு அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து முப்படைத்தளபதிகளும் திரு பாஸ்கரலிங்கத்திடம் வலியுறுத்திக் கூறியதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி இலங்கையில் நடைபெறும்?

(புதுடில்லி)

1995ம் ஆண்டு உலக கிண்ணக் கிரிக்கட் போட்டியை இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கான ஒப்பந்தத்தில். இந்தியாவும் பாகிஸ்தானும் ஏற்கனவே கைச்சாத்திட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இதேநேரம், இலங்கையிலுள்ள கிரிக்கெட் நடுவர்கள் போதிய அனுபவம் அற்றவர்கள், சர்வதேசப் போட்டிகளுக்கு நடுவராக இவர்களை நியமிப்பது ஆராயப்படவேண்டிய ஒரு விடயம் என்று, அவுஸ்திரேலியாக் கிரிக்கட் கோஷ்டியின் கப்டன் அலன் போடர் கருத்துத் தெரிவித்துள்ளார். (வி)

### புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பி பி ஸி க்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்

இனப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசினால் ஏற்பாடு செய்யப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினர் மீது எமக்கு நம்பிக்கை இல்லை ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திர கட்சியும் இதுவரை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் இனப் பிரச்னை தீர்வுக்கான ஆலோசனை எதையும் சமர்ப்பிக்கவில்லை. இப்படியான நிலையில் நாடாளுமன்றக் குழு எப்படி இனப் பிரச்னைக்குத் தீர்வு காணமுடியும்? எனவும் கலாநிதி பாலசிங்கம் கேள்வி எழுப்பினார். (வி

### தென்பகுதி

1ம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதாக இலங்கையில் ஜனநாயக மனித உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

தாம் தடுப்பு முகாம்களில் அனுபவித்துவரும் இன்னல்களை வெளிஉலகுக்குத் தெரியப்படுத்தும் விதமாக பலவத்த, வீரவிய ஆகிய பகுதிகளில் உள்ள தடுப்புமுகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்கள் உண்ணாவிரத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

குற்றம் செய்திருந்தால் வழக்குத் தொடுக்க வேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டும் தமக்கு போதிய பாதுகாப்பு தடுப்பு முகாம்களில் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்த இளைஞர்கள் உண்ணாவிரத போராட்டத்தில் குதித்துள்ளனர்.

தடுப்பு முகாம்களில் உள்ளோர் பலவிதமான இன்னல்களையும் கஷ்டங்களையும் அனுபவித்து வருகின்றனர். பலவத்த போன்ற ஒருதடுப்பு முகாமில் இருந்தால் நானும் சுரங்கம் வழியாகத்தான் தப்பிச் சென்றிருப்பேன் என்று இராணுவ அதிகாரி கேணல் ஆனந்தவீரசிங்க கொழும்பில் பத்திரிகையாளர் ஒருவரிடம் தெரிவித்துள்ளதாக பி. பி, ஸி. தெரிவித்தது. (இ)

## குரக்கன் கொள்வனவு

(நெல்லியடி)

கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவு, அப்பகுதி விவசாயிகளிடமிருந்து குரக்கன் கொள்வனவு செய்துவருகின்றது. (160)

### மின்னல் தாக்கி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இப் பலிகொண்டது.

குருநகர் மத்திய கிழக்கு தண்ணீர்த் தாங்கியடியைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான சவரியான்குட்டி இரவீந்திரன் (33 வயது) என்பவரே மின்னல் தாக்கிப் பலியானவராவர். இவரது சகோதரர் சவரியான்குட்டி செல்வா காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வி 65)

### பேராதனையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவக் கண்காட்சியைப் பார்ப்பதற்கு வயது வந்தவர்களுக்கு 20 ரூபாவும், மாணவர்களுக்கு 10 ரூபாவும் நுழைவுச் சீட்டுக் கட்டணமாக அறவிடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே மாணவர்கள் மறியல் போராட்டமும் ஆர்ப்பாட்ட ஊர்வலமும் நடத்தினரென்று தெரிவிக்கப்படுகிறது ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கல்வீச்சுச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

பல்கலைக்கழக செனட் கட்டடத்தைச் சுற்றியும், சில அதிகாரிகளின் காரியாலயங்களை சுற்றியும் மாணவர்கள் மறியல் செய்ததோடு இராமநாதன் பெண்கள் விடுதி மாணவிகளை 24 மணித்தியாலம் தடுத்தும் வைத்தனர்.

இதனால் மாணவிகள் பெரும் அவதிக்குள்ளானதாக அறிவிக்கப்படுகிறது.

நுழைவுச் சீட்டுக் கட்டணத்தை பெரியவர்களுக்கு 10 ரூபாவாகவும், மாணவர்களுக்கு 5ரூபாவாகவும் அறவிட்டால் தமது போராட்டத்தை கைவிடுவதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] 1992-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5ம் திகதி [illegible] வெளியிடப்படுகிறது.

Registered as a News paper at the G.P.O. Sri Lanka under Licence number No B/1033?/